# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,932/7— 1970 නොවැම්බර් 19 වැනි බ්‍රහස්පතින්දා — 1970.11.19

14,932/7 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ඵල්ජීඩී/ඕඔ/3/6/3

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

### 184 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 இன் 42 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவால் எனக் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பீலிக்ஸ் றெஜினேல்ட் டயஸ் பண்டார நாயக்க ஆகிய நான், இக்கட்டளைவாயிலாக வத்தேகமை பட்டினம் சம்பந்தமான முன் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1970 ஒற்றோபர் 13 ன் 14,927/6 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனோடுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் திருத்துகிறேன் :—

" (ஆ) அக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அப்பட்டினத்திற்கு ஒரு புதிய நகர சபை அமைக்கப்பட்டு அச்சபை தனது தலைவரைத் தெரிவு செய்யும் வரைக்கும், அந்நோக்கத்திற்கென அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு நகர சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரான திரு. குமாரசிங்க புஞ்சிபண்டா அவர்களை வத்தேகமப் பட்டினத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கின்றேன் ".

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, நவெம்பர் 19, 1970.
11–1012

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.